பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 08 2024 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு புதில்லியிலிருந்து இன்றுகாலை புறப்பட்டுச் சென்றார்.
2. பயங்கரவாதம் மற்றும் இணையதள குற்றங்களை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை என்று இந்திய — ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.
3. தொழில் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலமாக தமிழகம் உள்ளது என்ற நம்பிக்கை முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. இந்தியாவின் நிதி உதவியுடன் இலங்கையில் உள்ள ஐயாயிரம் கோவில்கள் மற்றும் புத்தமத கல்விக்கூடங்களில் சூரிய மின் தகடுகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
5. தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரதேச கடலோரப் பகுதிகளில் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு புதில்லியிலிருந்து இன்றுகாலை புறப்பட்டுச் சென்றார்.

முதலில் போலந்து நாட்டுக்குச் செல்லும் பிரதமர், அந்நாட்டு தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

தமது பயணத்தை தொடங்கும் முன் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போலந்து நாட்டுடனான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் தமது பயணம் அமையும் என்று கூறியுள்ளார்.

மத்திய ஐரோப்பிய மண்டலத்தில் இந்தியாவின் முக்கிய பொருளாதார நட்பு நாடாக போலந்து விளங்குகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பன்முகத் தன்மையையும், ஜனநாயகத்தையும் காக்க வேண்டும் என்பதில் இரு நாடுகளும் ஒரே திசையில் செயல்பட்டு வருவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக போலந்துடன் நீடித்து வரும் நட்புறவு குறித்தும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க் மற்றும் அதிபர் திரு **Andrzej duda** ஆகியோரை சந்திக்கும் நாளை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இந்த சந்திப்புகள் இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார வர்த்தக மற்றும் கலாச்சார ரீதியிலான உறவுகளை மேம்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளர்.

போலந்தில் உள்ள இந்திய வசம்வளியினரையும் தாம் சந்தித்து பேச உள்ளதாக பிரதமர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

போலந்து பயணத்தை முடித்துக் கொண்டு உக்ரைன் நாட்டுக்கு மேற்கொள்ளும் பயணத்தின்போது அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேச உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

முதல் முறையாக இந்திய பிரதமர் ஒருவர் உக்ரைன் செல்வதாக குறிப்பிட்டுள்ள திரு நரேந்திரமோடி, உக்ரைன் அதிபருடன் தாம் நடத்தும் பேச்சுக்கள் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

ரஷ்யாவுடனான உக்ரைன் போரை அமைதி பேச்சுக்களின் மூலம் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் தாம் அதிபருடன் பகிர்ந்து கொள்ள இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

வரும் நாட்களிலும் உக்ரைனுடனான உறவுகள் வலுப்பெறுவதற்கு உகந்த வகையில் தமது பயணம் அமையும் என்றும் திரு நரேந்திரமோடி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் அமெரிக்காவுக்கு நான்கு நாள் பயணமாக நாளை மறுநாள் செல்கிறார்.

அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆஸ்டினுடன் இருதரப்பு உறவுகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கு திரு ராஜ்நாத் சிங்கின் இந்த பயணம் உத்வேகம் அளிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவையும், உலகளாவிய ஒத்துழைப்பையும் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இந்த பயணம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு தொழில் துறையினருடன் நடைபெறும் உயர்மட்ட பேச்சுக்களிலும் திரு ராஜ்நாத்சிங் கலந்து கொள்கிறார்.

பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளும் இணைந்து மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்களுக்கும் இது அடித்தளமாக அமையும்.

இந்த பயணத்தின்போது அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியின ரையும் திரு ராஜ்நாத்சிங் சந்தித்து பேசவுள்ளார்.

**[]<<<>>>[]**

பயங்கரவாதம் மற்றும் இணையதள குற்றங்களினால் எழுந்துள்ள சவால்களை சமாளிக்க மண்டல அளவில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஐரோப்பிய யூனியனுக்கான இந்திய தூதர் திரு **Herve dolphin** வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய யூனியன் - இந்தியா இரண்டு நாள் மாநாட்டில் உரையாற்றிய அவர், தீவிரவாதிகள் ஆன்லைன் மூலமாக மேற்கொண்டு வரும் முறைகேடான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கூறினார்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், முன்னாள் வெளியுறவுத்துறை செயலருமான டாக்டர் கன்வால் சிபல் பேசுகையில், இந்த இரண்டு நாள் மாநாட்டில் ஆன்லைன் மூலமாக

மேற்கொள்ளப்படும் இணையதள குற்றங்களை ஒடுக்குவதற்கான ஆக்கப்பூர்வமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சர்வதேச ஒத்துழைப்புடன் இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

உலகளாவிய பயங்கரவாதத்தையும், இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்படும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்கிலும் ஐரோப்பிய யூனியனும், இந்தியாவும் இணைந்து இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

**[]<<<>>>[]**

தொழில் முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலமாக தமிழகம் உள்ளது என்ற நம்பிக்கை முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து, 19 தொழில் நிறுவனங்கள் சார்பில் 17 ஆயிரத்து 616 கோடி ரூபாய் முதலீட்டில் 19 திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

51 ஆயிரத்து 157 கோடி ரூபாய் மதிப்பில் 28 புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தொழில் வளர்ச்சியின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரமும், மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும் என்று கூறினார்.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் புதிய தொழில்களை தொடங்கி பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்ற இலக்கோடு மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக இளைஞர்களின் திறமையை தொழில் துறையினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

இந்தியாவின் நிதி உதவியுடன் இலங்கையில் உள்ள ஐயாயிரம் கோவில்கள் மற்றும் புத்தமத கல்விக்கூடங்களில் சூரிய மின் தகடுகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முறைப்படியாக இந்த திட்டத்தை தொடங்குவதற்கான நிகழ்ச்சி பின்னர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் குறித்து தெரிவித்த இலங்கையில் உள்ள இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா, முதல்கட்டமா 400 கோவில்களிலும், 800 புத்தமத கல்விக் கூடங்களிலும் சூரிய மின்சக்தி தகடுகள் அமைக்கப்பட உள்ளதாகக் கூறினார்.

மேலும் 300 கோவில்களில் இத்திட்டத்தின் கீழ் சூரிய மின் தகடுகள் அமைக்கும் திட்டம் பின்னர் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

15 மில்லியன் அமெரிக்க டாலர் இந்திய நிதி உதவியுடன் இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கைவாழ் தமிழர்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களை செயல்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாகவும் திரு சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

மலைத் தோட்டங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்கு சோலார் மின் விளக்குகளையும் அவர் வழங்கினார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர்களாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராம்மாதவ், மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு-கஷ்மீரில் அடுத்த மாதம் 18, 25 மற்றும் அக்டோபர் ஒன்றாம் தேதிகளில் மூன்று கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

முதற்கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் வாக்காளர்களை சேர்ப்பதற்கான சிறப்பு முகாம்கள் மூலம் புதிதாக 90 ஆயிரம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் ஜம்மு-கஷ்மீரில் தற்போது 88 லட்சத்து மூவாயிரம் வாக்காளர்கள் உள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை ஒன்றாம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு அங்குள்ள 20 மாவட்டங்களிலும் சிறப்பு புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஜம்மு-கஷ்மீரில் மகளிர் மற்றும் முதல்முறை வாக்காளர்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாகவும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாடு, கோழிக்கோடு, மலப்புரம், கோட்டயம், பத்தனம்திட்டா ஆகிய ஆறு மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் லட்சத்தீவு பகுதியில் 55 கிலோமீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே மூழியார் அணை மற்றும் மணியார் நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதையடுத்து தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கக்கட்டாறு மற்றும் பம்பா ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே நாட்டின் கிழக்கு, வடகிழக்கு மற்றும் தென்மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், லட்சத்தீவு, கடலோர கர்நாடகா, கடலோர ஆந்திரதேசம், ஏனம், ராயலசீமா, தெலங்கானா பகுதிகளில் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லியில் ஒருவார காலத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஜோர்டானில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Ronak Dahiya** வெண்கலப் பதக்கம் வென்றார்.

**[]<<<>>>[]**

பங்களாதேஷில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மகளிர் டுவெண்ட்டி - டுவெண்டி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த ஐ சி சி முடிவு செய்துள்ளது.

***End of News***